1995 ஏப்ரல் 17]

செய்கின்ற பொழுது, அதனை லேட்டஸ்ட் டெக்னாலஜி என்று சொல்லுவார்களே அதன் அடிப்படையில் புதிய தொழில் நுட்ப யுக்திகளை கையாண்டு அந்த முறைகளை புகுத்த அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணைத் தலைவருடைய கருத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 311, திரு.ஆர். சிங்காரம், மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

311—

கைத்தறித் துறைக்கு வங்கி அமைத்தல்

* **14609**—திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கைத்தறித் துறைக்கு தனி வங்கி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும் ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வரப்படுகின்றன.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கைத்தறித் துறைக்கு தனி வங்கி அமைக்கப்படும் செயற்குறிப்பு குறித்து அரசு பரிசீலித்து வருவது குறித்து நான் மெத்த மகிழ்ச்சி அடைகிறேன். அதேநேரத்தில் அதனுடைய கஷ்டங்கள் என்ன என்பதை மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களும், இந்த அரசும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் புரிந்திருக்கிற காரணத்தால் அதைப் பரிசீலிப்பதாக சொல்லியிருக்கிறார்கள். கைத்தறி நெசவாளர்களுக்கு கடன் கிடைப்பதிலே பல்வேறு வகையான கஷ்டங்கள் இருக்கின்றன. பொதுவாக தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் எந்த

துறைக்கு கடன் வாங்கச் சென்றாலும் அவர்கள் கடன் கொடுப்பதிலே மிகவும் தாமதம் ஆக்குகிறார்கள். சில நேரங்களில் 2 வருடங்கள் கூட ஆகின்றது. ஆகவே அதை நன்கு உணர்ந்த அமைச்சர் அவர்களும், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களும் உடனடியாக இந்த வங்கியை தனியாகத் துவங்குவதற்கு ஆவன செய்வார்களா, அதற்கு எப்போது காலக்கெடு என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7-2-1992-ல் கைத்தறித் துறையினுடைய மானியக் கோரிக்கையின் போது நெசவாளர்களுக்கு தனி வங்கி அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதனுடைய கருத்துருவை ரிசர்வ் வங்கிக்கும், 'நபார்ட்' வங்கிக்கும் நாங்கள் எழுதி அனுப்பினோம். ஆனால் ரிசர்வ் வங்கியும், நபார்ட் வங்கியும் அதை நிராகரித்து விட்டன. நாங்கள் நேரிடையாக தருகிற காரணத்தால் இப்படி ஒரு தனி வங்கி அவசியம் இல்லை என்று தெரிவித்து விட்டன. ஆனாலும் நெசவாளர்கள் மீது அதிக அக்கறை கொண்டிருக்கிற மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் தனியாக வங்கி அமைப்பதை நிச்சயமாக உறுதியாக ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருப்பதால் உடனடியாக நடவடிக்கை எடுக்கச் சொல்லி திரும்ப நபார்ட்டுக்கும், ரிசர்வ் வங்கிக்கும் கடிதம் எழுதுவதோடு நிற்காமல், நேரிடையாக பேச்சு வார்த்தை நடத்தச் சொல்லியிருக்கிறார்கள். அந்த பேச்சுவார்த்தைக்குப் பிறகு இந்தத் தனி வங்கி அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக அரசும், தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும், இங்கே கைத்தறித் துறைக்கு தனி வங்கி அமைப்பதற்காக இந்த ரிசர்வ் வங்கிக்கும், நபார்ட் இயக்கத்திற்கும் எழுதி அனுமதி கேட்டும், அனுமதி கிடைக்கவில்லை என்றும், மேலும் அது குறித்து முயற்சி எடுப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். அப்படி முயற்சி எடுத்து அதுவும் பலன் அளிக்காவிட்டால் கூட தமிழக அரசு, தனியாக அந்த வங்கி தொடங்குவதற்கு எண்ணம் கொண்டிருக்கிறது என்பதையும் இங்கே நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். எதையும், எந்த நேரத்திலும், எந்த பெரிய சக்தி எதிர் வந்தாலும், எதிர் நீச்சல் போட்டு, அதை தூள்தூளாக்குகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக முதமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில் தான் இது போன்ற கைத்தறித் துறையினருக்கும், நெசவாளர்களுக்கும், அவர்களுடைய

1995 ஏப்ரல் 17]

துயரைத் துடைக்க முடியும் என்கிற சூழ்நிலையில் இதைத் தனியாக எப்படியும் நபார்டு வங்கி மறுத்தாலும், ரிசர்வ் வங்கி மறுத்தாலும், இது தமிழக அரசினுடைய நிதியில் இருந்தாவது, இந்த வங்கியைத் தொடங்கி நெசவாளர்களுடைய துயரைத் துடைக்க ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திருமதி. இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அவர்கள் எடுத்துக் கொண்ட எந்தக் காரியங்களும் தோல்வியுற்றதில்லை. அவர் வெற்றி பெற்றது தான் வரலாறாக இருந்திருக்கிறது. அந்த வகையிலே நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சார்பாக ரூபாய் 50 கோடியும் மற்றும் ரூபாய் 10 கோடியும் முறையே பெறுவது என ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தோடு நபார்ட்டு வங்கியோடும், ரிசர்வ் வங்கியோடும், நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். அந்த முயற்சி நிச்சயமாகப் பலனளிக்கும் என்பதில் எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. தனி வங்கி நிச்சயம் துவக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. து. வரதராஜன்.

திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கைத்தறி நெசவாளர்களுக்கு கூட்டுறவுச் சங்கத்திலிருந்து சில வங்கிகளில் தன்னுடைய கணக்குகளை வைக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆகவே, மத்திய வங்கி இருக்கின்ற 40, 50 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒவ்வொரு முறையும் சென்று, அந்தக் கணக்குகள் வரவு செலவு செய்ய வேண்டிய ஒரு நிலைமை இருக்கிறது. அதனை மாற்றி, அந்த அந்த கைத்தறி நெசவாளர்கள் இருக்கின்ற அந்தப் பகுதியில் இருக்கின்ற கூட்டுறவு வங்கியிலாவது அந்த வரவு செலவை செய்யவும் அல்லது நேஷனலைஸ்டு வங்கியிலாவது வரவு செலவு செய்யவும், அல்லது கிராம கூட்டுறவு சங்கத்தினுடைய வங்கியிலாவது வரவு செலவு செய்யவும் ஏற்பாடு செய்தால் நெசவாளர்களுக்கு மிக சலுகையாக இருக்கும். இதைச் செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்கள் எந்த எந்த வங்கியிலே கணக்குகளை வைத்துக் கொண்டிருக்கிறார்களோ, அந்த வங்கிகள் தேசிய வங்கிகளாகத் தான் இருக்கின்றன. அவர்களுக்கு விருப்பப்பட்ட வங்கியிலே தான் அவர்கள் வரவு செலவு கணக்குகளை வைத்து அங்கேயிருந்து நிர்வகித்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலே எந்த மாறுதலும் இல்லை. எங்கேயாவது, அப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்கத்திலிருந்து எங்களுக்கு

புகார்கள் வந்திருந்தால் அதன் மீது நடவடிக்கை எடுக்கலாம். தற்சமயம், அப்படி எந்தப் புகாரும் இல்லாத காரணத்தினால் இந்த கேள்விக்கு இடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 312, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

312—

காளிப்பட்டியில் கைத்தறி சொசைட்டி செயல்பட நடவடிக்கை

***21659**-*டாக்டர் வெ. சரோஜா :*

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மல்லசமுத்திரம் ஒன்றியம், காளிப்பட்டியில் ஆதிதிராவிடர் கைத்தறி சொசைட்டி சரிவர செயல்படவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பல்வேறு நடவடிக்கைகள் தீவிரமாக எடுக்கப்பட்டு வருகிறது.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மல்லசமுத்திரம் ஒன்றியம், டி.என்.84 ஆதிதிராவிடர் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு மற்றும் உற்பத்தி விற்பனை சங்கத்தில் தொடங்கப்பட்டு, தொடர்ந்து நலிவுற்ற நிறுவனமாகவே இது இயங்கிக் கொண்டுவருகிறது. என்னுடையத் தொகுதியைச் சார்ந்த ஆதிதிராவிடர் நெசவாளர் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் அந்த நிறுவனங்கள் இலாபகரமாக அமைய என்னென்ன நடவடிக்கைகள் அரசு எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மல்லசமுத்திரம் ஒன்றியம், காளிப்பட்டியில்